செய்தி வெளியீடு எண் : 1606 நாள் : 15.09.2022

# செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டிற்கான அங்கக வேளாண்மை கொள்கையை உருவாக்குவது குறித்து தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 15.09.2022 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டம்

தமிழ்நாட்டிற்கான அங்கக வேளாண்மைக் கொள்கையை உருவாக்குதல் தொடர்பாக தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.09.2022) தலைமைச் செயலகத்தில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண்மை உத்திகளை பயன்படுத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவுப் பொருள் பாதுகாப்பு, விவசாயம், பல்லுயிர் பாதுகாப்பு, மண் வளப் பாதுகாப்பு ஆகியவற்றின் தேவை மற்றும் இதன் மூலம் அதிகரித்து வரும் அங்கக வேளாண்மை உற்பத்தி பொருட்களின் புதிய சந்தை வாய்ப்புகளைப் பயன்படுத்தி வேளாண் பெருங்குடி மக்களின் தற்சார்பினை நிலைநிறுத்திடத் தேவையான கருத்துக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கையை உருவாக்குவதற்கான அவசியம் குறித்தும், தமிழ்நாட்டில் படிப்படியாக அங்கக வேளாண்மையை விரிவுபடுத்துவது குறித்தும், அதற்காக, அரசு எடுக்க வேண்டிய கொள்கை முடிவுகள் குறித்தும் விரிவாக இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் நாட்டின் பிற மாநிலங்களில் குறிப்பாக, சிக்கிம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களின் அங்கக வேளாண்மைக் கொள்கை குறித்தும் அவற்றின் நடைமுறை சாத்தியக் கூறுகள், நடைமுறைப்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலை, புவியியல் அமைப்புக்கு உகந்த வகையில் அங்கக வேளாண்மைக் கொள்கை அமையவேண்டும்; விவசாயிகள் தாமாக முன்வந்து அங்கக வேளாண்மையில் ஈடுபடுவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

பாரம்பரிய வேளாண் உத்திகளை ஆராய்ந்து, அவற்றின் மேன்மைத் தன்மையினை உறுதி செய்து, அதனை ஆவனப்படுத்தி விவசாயிகளுக்கு

விழிப்புணர்வை ஏற்படுத்தி பரவலாக்குவதன் இன்றியமையாமையை தலைமைச் செயலாளர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அங்கக வேளாண் விளைபொருட்களை சேமித்தல், பதப்படுத்துதல், சந்தைப்படுத்துதலுக்கான வழிமுறைகள், சந்தை வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. அங்கக வேளாண்மையை ஊக்குவிக்க ஏற்ற பகுதிகளையும், பயிர்களையும் அடையாளம் கண்டு, தொகுப்பு அடிப்படையில் படிப்படியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், இதற்குத் தேவையான இடுபொருட்கள் அருகாமையில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், ஆலோசனை வழங்கப்பட்டது. குறிப்பாக மானாவாரிப் பகுதிகள், கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்கள்.

மேற்கண்ட கூட்டத்தில் வழங்கப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கிய வரைவு அங்கக வேளாண்மைக் கொள்கை உருவாக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு இறுதிசெய்யப்படும் என தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர், சிறப்புச் செயலாளர், துறைத் தலைவர்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள், அங்கக வேளாண் பிரதிநிதிகள், அங்கக வேளாண்மை சார்ந்த அரசு சாரா நிறுவனத்தினர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in